**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.107/2025** |
| Deposition of witness | : | P.W.1 |
| Name | : | துரைராமன் |
| Father's /Husband Name | : | செல்லையன் |
| Village | : | குடவாசல் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 45 |
| Occupation | : | கொத்தனார் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 23rd day of September 2025.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது குடவாசல் கிளார் தெருவில் குடியிருந்து கொத்தனாராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து தெருவில் வசித்து வருகிறார். கடந்த 17.11.2024 ம் தேதி இரவு 07.30 மணியளவில் எனது மகன்கள் டியூசன் சென்றிருந்தவர்களை அழைத்து வருவதற்காக எனது மனைவி மைதிலி சென்றிருந்தார். அப்போது ஆஜர் எதிரி மோகன் எனது மனைவியிடம் எங்கடி போற உன் வீட்டுக்காரனிடம் சொல்லி சரக்கு வாங்கி கொடுக்க சொல்லுடி என்று சொல்லி பேசிக்கொண்டிருந்த போது அதை தடுத்து எனது மனைவி கேட்டு விட்டு எனது மகன்களை அழைத்துக்கொண்டு வீட்டிற்கு வந்தார் அப்போது நானும் எனது மனைவி மற்றும் மாமியார் சரோஜா ஆகியோருடன் இருந்த போது ஆஜர் எதிரி என்னை பார்த்து குச்சிகாரி, தேவடியா என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். எதிரி எனது வீட்டு வாசலில் நின்று திட்டினார். அவ்வாறு ஆஜர் எதிரி என்னை திட்டியதால் எனக்கு அவமானம் ஏற்பட்டது. ஆஜர் எதிரி என்னை கையால் அடித்து அருகில் உள்ள வேலியில் தள்ளவிட்டார். ஆஜர் எதிரி எனது வேட்டிக்குள் கையை விட்டு எனது விறைப்பையை கிழித்துவிட்டார்.

அவ்வாறு கிழித்ததில் எனக்கு இரத்த காயம் ஏற்பட்டது. எனக்கு இரத்தம் அதிகமாக வந்ததால் என்னால் தாங்க முடியாத அளவுக்கு வலி ஏற்பட்டது. அங்கிருந்து எதிரி செல்லும் போது இன்னைக்கு தப்பிச்சிட்டடா என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி விட்டு சென்றார். அவ்வாறு எதிரி என்னை மிரட்டியதால் இன்று வரை ஏதாவது செய்துவிடுவாரா என்று எனக்கு அச்சமாக உள்ளது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக குடவாசல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்று அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். நான் திருவாரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது குடவாசல் போலீசார் என்னை விசாரித்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதிலுள்ள விபரம் நான் சொன்னதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் தொடர்ந்து திருவாரூர் அரசு மருத்துவமனையில் 28 நாட்கள் வரை சிகிச்சை எடுத்துக்கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்குவிசாரணை இல்லை.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.09.23 12:57:21 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.